Tiaano® Innovation In Inert Metals

Ti Anode Fabricators Pvt. Ltd.

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Feb. 13 : 665 Nos.
  Up to Jan. 13 : 659 Nos.
- **Performance Feb. 13 ...**
  Turnover growth : 5.48%
  Employment growth : 1.09%
  100% Attendance : 14.21%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano Innovation In Inert Metals –Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil –Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels –FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green –HHO Generators

Titanictrade We Deliver Value Chain –Portal for Exotic Metals

Tiaano Vidyashrm –Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




## பொறாமை!

ஆரோக்கியநாதனும், இருதயநாதனும் ஒரு கிராமத்தில் வசிக்கும் இரு விவசாயிகள். ஆரோக்கியம் அறிவில் சிறந்தவனாகவும், கடுமையான உழைப்பாளியாகவும் எப்பொழுதும் மனநிறைவுடனும் மகிழ்ச்சி பெற்றவனாகவும் இருந்தான். அதற்கு மாறாக, இருதயநாதன் சோம்பேறியாகவும், எதைக் குறித்தாவது நினைத்து வருத்தத்துடன் இருந்து வந்தான்.

ஆரோக்கியநாதனின் அறிவையும் ஆற்றலையும் கண்டு பொறாமைக் கொண்டான். அதனால் ஆரோக்கியத்தை கண்டாலே எரிச்சல் அடைய ஆரம்பித்தான். அவன் அனைத்திலும் நலிவுற்றுப்போக கடவுளிடம் கூட சிலசமயம் வேண்டிக் கொள்வான் இருதயம். தன்னைப்போலவே கிராமத்தார் அனைவரும் நலமுடன் வாழ நல்லெண்ணம் கொண்டிருந்த ஆரோக்கியத்திற்கு, கடவுள் கருணை மிகுந்து ஆசீர்வாதத்தை அருளி வந்தார். ஒரு முறை, பல வாரங்கள் வருந்திப் பாடுபட்டதன் பலனாக அவனது தோட்டத்தில் ஒரு புதுமாதிரியான பூசணிக்காயின் தோலில் வானவில் போல ஏழு நிறங்கள் இருந்தன. வாசம் மிக்க மலர் போன்று இனிய மனம் வீசியது. எல்லாவற்றுக்கும் மேலாக அது ஒரு விலங்கை போன்ற காட்சியும் தந்தது.

ஆரோக்கியம் அந்த விந்தையான பூசணிக்காயை தான் வைத்துக் கொள்வதை விட இந்நாட்டு அரசருக்கு வெகுமதியாக கொடுக்கலாம் என்று எண்ணினான். எனவே, அதை எடுத்துக் கொண்டு தலைநகருக்கு சென்று அரசனின் காலடியில் வைத்து,"அரசே! இது என் தோட்டத்தில் விளைந்தது. இதை நான் வைத்துக் கொள்வதை விட தங்களிடம் கொடுப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. எனவே, என் அன்பு வெகுமதியாக பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி வணங்கினான்.

விந்தையான தோற்றம் கொண்ட அந்தப் பூசணிக்காயைப் பார்த்து அரசர் பெரிதும் மகிழ்ந்தார். அரசர் அவனைப் பாராட்டி, அவனுக்கு ஓர் உண்மையான உயிருள்ள யானையை வெகுமதியாக தந்தார். இருதயநாதன் நடந்ததைப் பற்றி கேள்விப்பட்டான். அன்றிரவு தூக்கமே வராத அளவுக்கு பொறாமை ஏற்பட்டது. யோசித்து யோசித்து அவன் இருதயமே வலித்தது. ஆரோக்கியநாதன் செய்வதைக் காட்டிலும் நல்லதாகச் செய்து அரசரை மகிழ்விக்க வேண்டுமென்று எண்ணினான். அப்பொழுதான் அரசர் மனம் மகிழ்ந்து விலை மதிப்பற்ற வெகுமதி தருவார் என்று எண்ணி இரவு பகலாக சிந்திக்க ஆரம்பித்தான். கடைசியாக ஒரு பொம்மை யானையே அரசரை இவ்வளவு மகிழ்விக்குமானால் ஓர் உயிருள்ள யானை அரசரை எவ்வளவு மகிழ்ச்சியுறச் செய்யும்? அதற்குப் பதிலாக ஒன்றிரண்டு கிராமங்களையே அவர் எனக்குத் தந்து என்னை ஒரு ஜமீன்தார் ஆக்கி விடமாட்டாரா? என்று எண்ணி திட்டமிட்டான்.

கடைசியில் ஒரு உயிருள்ள யானையை அரசருக்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தான். மறுநாள், அவன் தன்னிடம் உள்ள நிலம், பசு, ஆடு, மாடு எருதுகள் என அனைத்தையும் விற்றான். அந்தப் பணத்தில் ஒரு யானையை வாங்கிக் கொண்டு அரசனிடம் சென்றான். எளிய விவசாயி ஒரு யானையை ஏன் தனக்குப் பரிசளிக்க வேண்டுமென்று அரசனுக்குப் புரியவில்லை. அறிவுமிக்க அமைச்சரை கலந்து பேசினான். அதன் காரணத்தைக் கண்டுபிடிக்கவும், அதற்கு பதில் ஒரு நல்ல பரிசினைக் குறிப்பிடவும் அமைச்சரிடம் வேண்டினான். அறிவியல் சிறந்த அந்த அமைச்சர் இருதய நாதனிடம் பேசினார். கொஞ்ச நேரத்தில் வெறும் பொறாமையாகதான் அவன் இங்ஙனம் யானையைப் பரிசளிக்க தூண்டியிருக்கிறது என்பதை புரிந்து கொண்டான்.

அதனால் அரசனிடம் சென்று அரசே! முன்வந்த விவசாயிக்கு அவன் தந்த பூசணிக்காய்க்குப் பதிலாக தாங்கள் ஓர் உயிருள்ள யானையைப் பரிசாக அளித்தீர்கள். இவன் தந்துள்ள யானைக்குப் பதிலாக ஒரு நல்ல பூசணிக்காயைத் தந்துவிடுங்கள் என்று கூறினார். ஒரு சாதாரண பூசணிக்காயை பரிசாகப் பெற்றவுடன் மிகவும் நொந்து போனான். தன்னுடைய சொத்தையெல்லாம் விற்றுவிட்டு இப்போது மிகுந்த ஏழ்மை மிக்க மனிதனாக ஆகிவிட்டான். இதற்கெல்லாம் காரணம் அவனுள் எழுந்த பொறாமையின் விளைவு. மேற்கண்ட கதையில் ஒருவர் அடுத்தவர் மேல் பொறாமை கொண்டதினிமித்தம் எவ்வளவு கேடான ஒரு நிலைமைக்கு வந்துவிட்டார் என்று அறிந்துகொண்டீர்கள். ஒருவருக்குள் இருக்கும் பொறாமை அவருக்கே கெடுதலாக அமைந்துவிடும்.

Ms. P.E. Nancy
Director – Admin

## FUNCTIONAL WISHES



**Tamil New year**

**14th April**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:044 - 22294565<br>M/s. Jeya Clinic,<br>Tel: 098408 73107 |

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னைவளர்ப்பினிலே!

**Mr. G. S. Mohana Kumar -** Production **1st Apr.**

**Mr. G. Manivannan -** Coating **1st Apr.**



**Mr. C. Abilash -** Facilitaion **3rd Apr.**

**Mr. T. Raveendran -** Marketing **4th Apr.**

**Mr. G. Janarthanan -** Fib Tec **5th Apr.**

**Mr. M. Pullan -** Production **7th Apr.**

**Mr. A. Nedunchizhian -** Production **7th Apr.**

**Mr. T. Ramesh -** Production **8th Apr.**

**Mr. K. Murugan -** Production **8th Apr.**

**Mr. T. Stephen Prabakar -** Finance **9th Apr.**

**Mr. S. Kannan -** Production **10th Apr.**

**Mr. P. Balasubramanian -** Production **11th Apr.**

**Mr. C. Subash -** Production **13th Apr.**

**Mr. D. Murugesan -** Project **19th Apr.**

**Mr. N. Muruganantham -** Fib Tec **20th Apr.**

**Mrs. A. Nirmala -** Finance **22nd Apr.**

**Mr. N. Shanmugam -** Project **30th Apr.**

**Best Wishes from Tiaano Employees**

### **கான்.:.பிடன்ஸ் கார்னர்**

ஹென்றி .:.போர்டிடம் தொழில் தொடர்பான கேள்விகளை நிறைய பத்திரிகையாளர்கள் கேட்டதுண்டு. அவரும் விரிவாக பதில் சொல்வார். ஒருநாள் மாலை, உணவகம் ஒன்றில் ஹென்றி .:.போர்டு அமைதியாக உட்கார்ந்திருப்பதை ஒரு பத்திரிகையாளர் பார்த்தார். அவரை நெருங்கி தனிப்பட்ட முறையில் ஒரு கேள்வி கேட்டடார். "அய்யா! உங்கள் மிகச் சிறந்த நண்பர் யார்?.

ஒரு நிமிடம் யோசித்த ஹென்றி .:.போர்டு, பேனாவை எடுத்து, மேசை விரிப்பின்மேல் கொட்டை எழுத்தில் எழுதினார், "உங்களுக்குள் இருக்கும் மிகச் சிறந்த அம்சத்தை யார் வெளிக்கொண்டு வருகிறாரோ அவர்தான் மிகச் சிறந்த நண்பர்".

இப்போது சொல்லுங்கள். உங்களுக்கு மிகச் சிறந்த நண்பர்கள் உண்டா?.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### **வைரஸ் தாக்கிய 'பென்ட்ரைவ்' விலிருந்து பைல்களை மீட்க சிம்பிள் வழி!**

தற்பொழுது தகவல்களை சேமிக்க பெரும்பாலானவர்களால் பயன்படுத்தப்படுவது USB பென்டிரைவ்கள். இதில் முக்கியமான பிரச்சனை வைரஸ் பிரச்சனை. வெவ்வேறான கணினிகளில் உபயோகிப்பதால் வைரஸ்கள் சுலபமாக பென்டிரைவில் புகுந்து உள்ளே இருக்கும் பைல்களை பாதிக்கிறது.

இப்படி பாதிக்கும் பொழுது உங்கள் பென்டிரைவில் உள்ள பைல்கள் மறைக்கப்பட்டுவிடும் கணினியில் பென்ட்ரைவை ஓப்பன் செய்தால் எந்த பைல்களும் இருக்காது. வெற்றிடமாக இருக்கும். ஆனால் Properties சென்று பார்த்தால் பைல்கள் இருப்பது போன்றே அளவு காட்டும். காரணம் நம் தகவல்களை வைரஸ்கள் மறைத்து வைத்துவிட்டது. பென்டிரைவில் முக்கியமான தகவல்கள் ஏதும் இல்லை எனில் Format செய்து பென்டிரைவை திரும்ப பெறலாம். ஆனால் ஏதேனும் முக்கியமான தகவல்கள் இருந்தால் எப்படி அந்த பைல்களை பத்திரமாக மீண்டும் கொண்டுவருவது என பார்ப்போம்.

1. முதலில் பென்டிரைவை உங்கள் கணினியில் சொருகி கொள்ளுங்கள்.
2. Start ==> Run ==> CMD==> Enter கொடுக்கவும்.
3. இப்பொழுது பென்டிரைவ் எந்த டிரைவில் உள்ளது என பாருங்கள். My Computerசெல்வதன் மூலம் கண்டறியலாம்.
4. உதாரணமாக E: டிரைவில் பென்டிரைவ் இருக்கிறது என வைத்து கொள்வோம். அதற்கு நீங்கள் E : என கொடுத்து Enter அழுத்தவும்.
5. attrib -h -s -r /s /d *.* என டைப் செய்யுங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் Space சரியாக கொடுக்கவும்.
6. நீங்கள் சரியாக கொடுத்து உள்ளீர்கள் என உறுதி செய்து கொண்டு Enter அழுத்துங்கள்.

சில வினாடிகள் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்கள் பென்டிரைவை சோதித்து பாருங்கள் உங்களுடைய பைல்கள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### நம் உடலை பாதிக்கும் 10 விஷயங்கள்

1. காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு ரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும் தேவையான ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் ஆக்கி மூளை அழிவுக்குக் காரணமாகும்.

2. மிக அதிகமாகச் சாப்பிடுவதால் மூளையில் இருக்கும் ரத்த நாளங்கள் இறுகக் காரணமாகி மூளையின் சக்தி குறைவுக்குக் காரணமாகும்.

3. புகை பிடிக்கும் பழக்கம் மூளை சுருங்கவும், அல்ஸைமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது.

4. நிறைய சர்க்கரை சாப்பிடுவதால் புரோட்டின் நமது உடலில் சேர்வதைத் தடுக்கிறது. இதுவும் மூளை வளர்ச்சிக்கு பாதிப்பாகிறது.

5. மாசு நிறைந்த காற்றை சுவாசித்தல் நமக்குத் தேவையான ஆக்ஸிஜனை நாம் பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஆக்ஸிஜன் செல்லாவிட்டால் மூளை பாதிப்படையும்.

6. நல்ல தூக்கம் நம் மூளைக்கு ஓய்வு கொடுக்கும். வெகு காலம் தேவையான அளவு தூங்காமலிருப்பது மூளைக்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும்.

7. தலையை மூடிக்கொண்டு தூங்குவது, போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நீங்கள் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை குறைக்கிறது. குறைவான ஆக்ஸிஜன் மூளையைப் பாதிக்கிறது.

8. உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும், உடல் சரியாக ஆன பின்னால், மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.

9. மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனை மேற்கொள்ளாமல் இருப்பது மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவாகின்றன. அதனால், மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது.

10. பேசாமல் இருப்பது

Collected from internet

### ஆராய்ந்து அறிய வேண்டும்

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கைமேல் குளிர்காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படித்தான் 'அரசே அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்' என்று நம்பிக்கை ஊட்டினார். மன்னன் சேவகனை அழைத்து காலையில் எங்கேயாவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன்பின் தினமும் பொழுதுவிடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கிவிடுவான்.

ஒரு நாள் அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான்." அடடா! நல்ல சகுனம் இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடிவந்து மன்னரிடம் விபரம் சொன்னான். இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காய் 'வாக்கிங்' போய்விட்டது.

மன்னனுக்கு மூக்கின்மேல் கோபம் வந்துவிட்டது. தளபதியை அழைத்து 'இந்தப்பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு' என்று உத்தரவிட்டான். சேவகன் சிரிக்க ஆரம்பித்துவிட்டான். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போல. மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது, 'நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி' என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். 'மகா மன்னரே, இன்று நான் மட்டும் தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கைமேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?' என்றான். மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது. இதைக் கேட்டதும் சோதிடர் அங்கிருந்து நழுவி விட்டார்.

மன்னரும் மூட நம்பிக்கையிலிருந்து தெளிவு பெற்றதுடன் பிறர் கூறும் சொற்களை ஆராய்ந்து அறிய வேண்டும் என்பதை உணர்ந்தார்.

Compiled by : Mr. D. S. Anish
System Admin

## நம்பித்தான் ஆக வேண்டும்
## 5S (தொடர்ச்சி XX)

**சிவப்பு, பச்சை, மஞ்சள்**

காலண்டரில் அச்சிடப்பட்டிருக்கும் முருகர் படத்தைக் கவனிக்கிறோம் நாம். பயன்படாத பொருள் என்று நாம் தீர்மானித்தது, அரை நிமிஷத்துக்குள் தப்பாகிவிட்டது.

சரி, மிச்சமிருக்கும் பொருள்களையாவது வீசி எறியலாமே என்று யோசித்தால், புதிதாக இன்னொரு பிரச்சனை முளைக்கிறது. 'என்னோட ப்ரஷ் ஷு' என்று அழுதபடி வருகிறது பொடிசு. 'அய்யே, அசிங்கமா, அழுக்கா இருக்கு. இந்த ப்ரஷ்ல போய் யாராவது பல் தேய்ப்பாங்களா?' என்று நாம் சாமர்த்தியமாகப் பேசுவது எடுபடவில்லை. 'நான் தேய்ப்பேன்' என்றபடி அதைப் பிடுங்கிக் கொள்கிறது குழந்தை.

'செய்ரி' யைச் செயல்படுத்த விரும்புகிற எல்லாரும் இந்தப் பிரச்னையைச் சந்தித்தாக வேண்டும். ஒரு பொருள், பயன்படாதது அல்லது தேவைப்படாதது என்று யார் தீர்மானிப்பார்கள்? எப்படித் தீர்மானிப்பார்கள்?.

## கவிதைகள்

**வளர்ச்சி**
நெல்லு விளைகிற பூமியில்,
கல்லு வெளஞ்சிருக்கு,
ரியல் எஸ்டேட்.

**முயற்சி**
வாழ்க்கையில் முயற்சி தவறலாம்,
ஆனால் முயற்சிக்க தவறலாமா?

**வெற்றி**
முடியும் என்றால் முயற்சி செய்,
முடியாது என்றால் பயிற்சி செய்.

Compiled by : Mrs. T. Gowsala
Facilitation

**தமிழ் புத்தாண்டு**

சூரியன் கதிர் பரப்ப
தாமரை இதழ் விரிக்க
அந்தணர் இன்னிசைகானம் இசைக்க
புதுமணப் பெண்ணாய் பவனி வா
இனிய தமிழ் புத்தாண்டே...!

**நட்பு**

நினைவில் வைத்து
கனவில் காண்பதல்ல நட்பு!!!
மனதில் புதைத்து
மரணம் வரை தொடர்வது தான்
உண்மையான நட்பு

Collected by : Mr. M. Kumar
Design

## சிந்தனைக்கு

- சாந்தமும் சகிப்புத் தன்மையும் ஒரு அறையின் குளிர்சாதனம் போல் செயல்படுகின்றது, அவை மனிதனின் செயல் திறனை அதிகரிக்க செய்கின்றது.

- தனது கோபத்தை கட்டுபடுத்த முடியாதவன் பிறரது இயலாமையை எப்படி விமர்சிக்க முடியும்.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

உதாரணமாக, உங்களுடைய அலுவலகத்தில் ஒரு கத்தி இருக்கிறது. எப்போதோ யாரோ பிறந்த நாள் கொண்டாடியபோது 'ஹாப்பி பர்த்டே' கேக் வெட்டுவதற்காக வாங்கிய கத்தி. இப்போதெல்லாம் யாரும் ஆஃபீசில் பிறந்தநாள் கொண்டாட விரும்புவதில்லை. ஆகவே, இந்தக் கத்தி அநாவசியம் என்று முடிவு செய்து, அதைத் தூக்கி வீசுவதாகத் தீர்மானிக்கிறீர்கள்.

இந்த முடிவு, உங்களுக்கு மிகவும் சரியானதாகத் தோன்றலாம். ஆனால் மற்றவர்கள் இந்த முடிவை முழுமனத்தோடு ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகம்தான். அதுமட்டுமில்லை, பல சந்தர்ப்பங்களில், எது பயனுள்ளது, எது பயனற்றது என்று தீர்மானிக்க முடியாமல் நாமே குழம்பி விடுகிறோம். அதுபோன்ற சமயங்களில் 'செய்ரி' நமக்கு இன்னொரு தந்திரத்தைக் கற்றுக்கொடுக்கிறது.

இதன் பெயர் 'Tagging'. கொஞ்சம் கலோக்கியலாக நம் ஊர் பாஷையில் சொன்னால், 'ரிப்பன் கட்டுவது'. பெரிய துணிக்கடைகளில் ரெடிமேட் சட்டைகள், பேன்ட்களைப் புரட்டும் போது, அவற்றில் ஒரு சிறிய பிளாஸ்டிக் நூலைக் கட்டியிருப்பார்கள். அதன் முனையில் சில சீட்டுகள் தொங்கும்.

இந்தச் சீட்டுகளில், அந்த ஆடையைத் தயாரித்த நிறுவனத்தின் பெயர், ஆடை வகை, விலை, அதை எப்படித் துவைப்பது என்பது பற்றிய குறிப்புகள் போன்ற பல விஷயங்கள் இடம் பெற்றிருக்கும். இதைத்தான் 'Tag' என்று சொல்கிறோம். தொழிற்சாலைகளில் அல்லது நமது வீடு, அலுவலகங்களில் 'செய்ரி'யைச் செயல்படுத்தும்போது, பயன்படுகிற பொருள் எது, பயன்படாதது எது என்ற சந்தேகம் குழப்பம் எழுந்தால், இதே போன்ற சில 'Tag' களைப் பயன்படுத்தி முடிவெடுக்க முடியும்.

தொடரும்...

### TIAANO VIDYASHRM SCHOOL(CBSC) – ADMISSION OPEN (2013-14)



Visit http://www.tiaanovidyashrm.com/Application.aspx for online application or contact **Ph.** : 044 – 2276 0030 **Email :** info@tiaanovidyashrm.com

| **Pre KG to UKG** | **1st Std to 3rd Std** |
|---|---|
| No. 4/379, Saravanabava Nagar, 3rd street, Old Perungalathur, Chennai – 600 063. | No. 250, Pushpagiri, (Cross Road – Padappai bus stand to Sriperumbudur highway), Padappai – 601 301. |